[திரு. செ. அரங்கநாயகம்] [1978 பிப்ரவரி 28

தற்போழுது கல்லூரி ஆசிரியர் சங்கக் கூட்டு நடவடிக்கைக் குழு விடுத்துள்ள கோரிக்கைகளை அரசு மிக்க கவனத்துடன் பரிசீலித்து வருகிறது. மேலும் கல்லூரி மற்றும் பல்கலைக் கழக ஆசிரியர்களது முறையீடுகள் குறித்து அரசு இதுகாறும் பரிவுடன் பரிசீலித்து வந்துள்ளது. இனியும் அவர்களது குறைகளைப் போக்க ஆவன செய்ய வேண்டுமென்ற உறுதியும் பூண்டுள்ளது.

1977 டிசம்பர் திங்களில் மதுரைப் பல்கலைக் கழக ஆசிரியர்களின் தேர்வுப் பணி புறக்கணிப்பு நடவடிக்கைகளினால் மாணவர்கட்கு எண்ணிலடங்கா இடர்ப்பாடுகள் ஏற்பட்டன. இதனைக் கருத்தில் கொண்டும், ஆசிரியர்களின் இதர கோரிக்கைகள் அரசினரின் பரிசீலனையில் இருந்து வருவதாலும் தேர்வுப் புறக்கணிப்பினால் மாணவர் மற்றும் பெற்றோர்கட்கு ஏற்படும் இடர்ப்பாடு களைத் தவிர்க்கும் பொருட்டும் கல்லூரி மற்றும் பல்கலைக் கழக ஆசிரியர்கள் தமது தேர்வுப் பணியைப் புறக்கணிப்பது என்ற முடிவினைக் கைவிட்டு, வரும் தேர்வுகள் சிறப்பான முறையில் நடைபெற ஒத்துழைப்பு நல்குவர் என்று அரசு நம்பிக்கை கொண்டுள்ளது.

திரு கே. எஸ். கணபதி: துணைத் தலைவரவர்களே, ஆசிரியர்கள் போராட்டத்தை முன் வைத்திருக்கிறார்கள். அதைத் தடுப்பதற்கு அரசு என்ன நடவடிக்கை எடுக்கப்போகிறது என்பதைப்பற்றி அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு மேலவைத் துணைத் தலைவர்: நீங்கள் கேட்கலாம். ஆனால் அந்தத் தீர்மானத்தை நான் இங்கு அனுமதித்தால்தான், அதைப்பற்றிப் பிரச்சினை எழுப்ப முடியும். மாண்புமிகு அமைச்சர் அவர்களின் விளக்கத்திற்குப் பிறகு, இந்த அவை நிகழ்ச்சிகளை ஒத்திவைக்க வேண்டிய அவசியமில்லை என்று கருதி, இந்த ஒத்திவைப்புத் தீர்மானத்திற்கு அனுமதி மறுக்கிறேன்,

(முற்பகல் 11-40)

4. அறிவிப்பு.

அலுவல் ஆய்வுக் குழுவின் முடிவு.

மாண்புமிகு மேலவைத் துணைத் தலைவர்: இன்று (28-2-1978) காலை 10 மணிக்குக் கூடிய அலுவல் ஆய்வுக் குழு கீழ்க்கண்டவாறு முடிவு செய்துள்ளது.

மேலவைக் கூட்டம் 2—3—1978 வரை நடைபெறும். மார்ச் 3 முதல் 14 ஆம் தேதி வரை கூட்டம் இல்லை.

1978 பிப்ரவரி 28] [மேலவைத் துணைத் தலைவர்]

15—3—1978 முதல் 25—3—1978 வரை கொள்கை விளக்கக் குறிப்புகள் விவாதிப்பதற்காகக் கூடும்.

15—3—1978 }
16—3—1978 } கல்வி பற்றிய கொள்கை விளக்கக் குறிப்பின்மீது விவாதம்.

17—3—1978 வேளாண்மை மற்றும் பாசனம் பற்றிய கொள்கை விளக்கக் குறிப்புகள்மீது விவாதம்.

மேலவை வழக்கம்போல் காலை 10-30 மணி முதல் பகல் 1-30 மணிவரை கூடும்.

5. கவன ஈர்ப்பு.

அருப்புக்கோட்டை தொகுதியில் பாளச்சி ரெவின்யூ பிர்க்காவில் ராக்ஷஸ குழாய் கிணறுகள் அமைப்பதால் விவசாயக் கிணறுகளில் நீர் மட்டம் குறையக்கூடிய அபாயத்தால் விவசாயிகள் ஈடுபட்டுள்ள மறியல் போராட்டம் குறித்து.

திரு. வே. தங்கப்பாண்டியன்: மாண்புமிகு துணைத் தலைவர் அவர்களே, கீழ்க்கண்ட அவசரப் பொது முக்கியத்துவம் வாய்ந்த நிகழ்வினைக் குறித்து மாண்புமிகு தொழிலாளர் நல அமைச்சர் அவர்களின் கவனத்திற்குக் கொண்டு வருகிறேன்:

"அருப்புக்கோட்டை சட்டமன்றத் தொகுதியில் பாளச்சி ரெவின்யூ பிர்க்காவில் சுமார் ஒரு கோடி ரூபாய் திட்டத்தில் ராக்ஷஸ குழாய் கிணறுகள் ஆறு இடங்களில் அமைத்து குழாய்கள் மூலம் வேறு தாலுகாவிலுள்ள யூனியன் பகுதிகளுக்கு குடி தண்ணீர் வசதி செய்ய திட்டமிட்டுள்ளதால், இந்தப் பகுதிகள் தங்கள் விவசாயக் கிணறுகளில் நீர் மட்டம் குறைந்து, நாளடைவில் பஞ்சப் பகுதியாக மாறிவிடும் என அஞ்சி, விவசாயிகள் மறியல் போராட்டத்தில் ஈடுபட்டுள்ளதைக் குறித்து"

மாண்புமிகு திரு. எஸ். இராகவானந்தம்: மாண்புமிகு துணைத் தலைவரவர்களே,

கடலாடி, சாயல்குடி, மற்றுமுள்ள 82 கிராமங்களுக்கும் ரூ. 101 இலட்சங்கள் செலவில் குடிநீர் வழங்குவதற்கான ஓர் ஒருங்கிணைந்த குடிநீர் திட்டத்தின் உத்தேச மதிப்பீடு (Outline proposal) தமிழ்நாடு குடிநீர் வடிகால் வாரியத்தால் தயாரிக்கப்பட்டது. குடிநீர் வழங்கப்பட வேண்டிய இடத்திலிருந்து 40 கிலோ மீட்டர் தொலைவில் ஓடும் வைகை நதியையும், கடலாடிக்கு